I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.13 (L.W.12)
SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Kugan |
| Father Name | : | |
| Occupation | : | Head Constable, New Town Police station. Cuddalore |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.02.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்:12.50 p.m**

**முதல் விசாரணை–**

2006 ஆம் வருடம் வேலூர் ஆயுதப்படையில் காவலராக பணி செய்து வந்தேன். ஆயுதப்படை தனிப்பிரிவு காவலராக இருந்தேன். என்னுடைய incharge SI சீனிவாசன் ஆவார். பணி சம்மந்தமாக அவருக்கு ஒரு தகவல் வந்தது. 21.03.2006 அன்று மாலை 03.30 மணிக்கு DSP. Vellore அலுவலகத்திற்கு எங்கள் டீம் போனோம். அங்கு உத்தரவு படி எங்கள் டீம் விரிஞ்சிபுரம் என்ற ஊருக்கு சென்றோம். SI இல்லாமல் சுமார் 10 பேர் சென்றோம். விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு மேல் அதிகாரி சாராய ரெய்டு சம்மந்தமாக அறிவுரை வழங்கினார்கள். அங்கிருந்து 16.45 மணிக்கு புறப்பட்டு சிவநாதபுரம் மலை அடிவாரத்திற்கு கையிலாய மலைக்கு எங்கள் டீமுடன் சென்றோம். தலைமை காவலர் சிவாஜி. SI சீனிவாசன், தலைமை காவலர் குமார்., அந்தோணி ராஜா, நான், ராஜமூர்த்தி, PC 1063 மற்றவர்கள் பெயர் சரியாக நினைவில்லை. நாங்கள் அனைவரும் மலைக்கு போனோம். விரிஞ்சிபுரத்திலிருந்து TN 23 G 0394 என்ற Eicher வாகனத்தில் சிவநாதபுரம் கையிலாய மலை அடிவாரத்திற்கு சென்றோம். அதிகாரி சொன்ன இடத்திற்கு அங்கிருந்து வண்டி போகாது நடந்து தான் போக வேண்டும். அதனால் நடந்து

போனோம். நடந்து போனபோது சாராயம் விற்கிற இடத்திற்கு சென்றோம். நாங்கள் சீருடையில் தான் சென்றோம். எங்களை பார்த்து பொது மக்கள் 3 , 4 பேர் எங்களை பார்த்து அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பாறை இடுக்கில் 4 பேர் சாராயம் விற்பது எங்கள் தெரிந்தது. அவரை நோக்கி நாங்கள் செல்லும் போது எங்கள் உதவி ஆய்வாளர் சீனிவாசனை நோக்கி நால்வரில் ஒருவர் இங்கேயே வந்தீட்டங்களா நீங்க எங்கள பொழைக்க விடமாட்றீங்க சுட்றேன் பாரு என்று எங்களை அசிங்கமாக திட்டி சீனிவாசன் உதவி ஆய்வாளர் அவர்களை சடையன் என்பவர் நாட்டு துப்பாக்கியால் சுட்டார்.சீனிவாசன் அதை பார்த்து பயந்து பாறை இடுக்கில் ஒளிந்து கொண்டார். பின்னாடி வந்த DSP மற்றொரு நபரை பார்த்து எல்லாரும் சரணடைந்துவிடுங்கள் இல்லை என்றால் சுட்டு பிடிப்பது போல் இருக்கும் என்று தெரிவித்தார். நடுபையனிடம் ஒரு துப்பாக்கி இருந்தது. எங்களையும் எங்களுடன் வந்தவர்களை காப்பாற்றி DSP எச்சரிக்கை செய்தார். DSP அவர்களிடம் gun இருந்தது. எச்சரித்தும் அந்த 4 பேரில் ஒருவர் கல்லால் கட்டையால் போலீசார்களை அடித்தார்கள். நிலைமை critical ஆக இருந்ததாக நினைத்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நடுபையனை DSP வலது காலில் சுட்டார். உடனே அங்கிருந்த நபர்கள் நடுபையனை பிடிக்க சென்றார்கள். அந்தோணி ராஜா என்பவரை கத்தியால் கையிலும் மார்பிலும் சாராயம் விற்ற ஒரு நபர் கத்தியால் தாக்கினார். அதனால் அவருக்கு அடிப்பட்டது.

அதன்பிறகு எல்லாரையும் அரசு அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நான் சொன்ன 4 பேரும் நீதிமன்றத்தில் உள்ளார்களா என்றால் 2 பேர் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியுள்ளார்கள். நாட்டு துப்பாக்கிகள் மற்றும் கத்தி ஆகியவற்றை நீதிமன்றத்தில் உள்ளதா என்று அடையாளம் காட்டுங்கள் என்றால் submit செய்திருப்பார்கள். யார் யார் என்ன என்ன துப்பாக்கிகள் வைத்திருந்தார்கள் கத்தி யார் வைத்திருந்தார்கள் என்றால் நடுபையனிடம் ஒரு நாட்டு துப்பாக்கி, சடையனிடம் ஒரு நாட்டு துப்பாக்கி இருந்தது. யார் யார் என்ன துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்றால் நீதிமன்றத்தில்

உள்ளது ஆனால் யார் வைத்திருந்தார்கள் என்று தெரியவில்லை. கத்தியும் நீதிமன்றத்தில் உள்ளது. அந்த கல் நீதிமன்றத்தில் உள்ளதா என்றால் உள்ளது. என்னை DCRB DSP அவர்கள் விசாரணை செய்தார்.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

ரெய்டு போனதாக சொல்லப்படும் சம்பவம் 21.03.2006 ல் நடந்தது. எனக்கு எழுத்து மூலமாக எதாவது தகவல் வந்ததா என்றால் வாய்மொழி உத்தரவு தான். எத்தனை மணிக்கு உத்தரவு வந்தது என்றால் நாங்கள் ஆயுதப்படையில் இருக்கும் போது மாலை 03.30 மணிக்கு வந்தது. எங்களுடைய incharge SI சீனிவாசன் தகவல் சொன்னார். நாங்கள் 10 பேர் ஆயுதப்படை வாகனத்தில் இருந்தோம். அங்கிருந்து 03.30 மணிக்கு கிளம்பி DSP, Vellore அலுவலகத்திற்கு சென்றோம். நாங்கள் இருந்த இடத்திற்கும் வேலூர் DSP அலுவலகத்திற்கும் சுமார் 3 கிமீ இருக்கும். நாங்கள் 10 பேரும் DSP அலுவலகத்திற்கு 04.00 மணிக்குள் சென்று விட்டோம். அங்கு முக்காள் மணி நேரம் இருந்தோம். அதன் பிறகு விரிஞ்சிபுரம் காவல் நிலையம் சென்றோம்.எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 04.45 மணிக்கு போய்விட்டோம்.

DSP அலுவலகத்திலிருந்து விரிஞ்சிபுரம் காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சரியாக தெரியவில்லை. விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் சுமார் கால் மணி நேரம் இருந்தோம். அங்கிருந்து கிளம்பி சிவநாதபுரம் பக்கத்தில் கையிலாய மலைக்கு சென்றோம். அது எவ்வளவு தூரம் என்றால் எனக்கு சரியாக தெரியாது.எவ்வளவு நேரத்தில் சென்றோம் என்றால் மாலை 06.00 மணிக்கு மலை அடிவாரத்திற்கு சென்றோம். நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் சென்றோம் என்றால் நாங்கள் 10 பேரும் ஒரு வாகனத்திலும் SI அவர்கள் DSP அவர்களுடனும் சென்றார். TN 23 G 0394 என்ற வாகனத்தில் சென்றோம். நாங்கள் சென்ற பகுதி வீடுகள் உள்ளதா என்றால் சரியாக நினைவில்லை.

எங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு சுமார் 2 கிமீ நடந்து சென்றோம். அங்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 2 கிமீ தூரம் நடந்து சென்றோம், மணி

சரியாக தெரியவில்லை. மாலை 06.00 மணிக்கு சென்றோம். அங்கிருந்தது நாட்டு துப்பாக்கி. இரண்டுமே நாட்டு துப்பாக்கிதான். இரண்டும் ஒரே மாதிரியான நாட்டு துப்பாக்கி தான் என்றால் சரிதான், ஒன்று பெரியது. ஒன்று சிறியது. வேறு என்ன பார்த்தேன் என்றால் 2 டயர் டியுப்பில் சுமார் 100 லிட்டர் இருந்தது. சாராயத்தை அங்கேயே அழித்துவிட்டோமா என்றால் சேம்பல் எடுத்து கொண்டு மீதி சாராயங்களை அழித்து விட்டோம். 25 முடி போட்ட சாராய பேக்கெட்டை எடுத்து வந்துவிட்டோம். மீதி அங்கேயே அழித்து விட்டோம். அங்கு எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் முக்காள் மணி நேரம் இருந்தோம். எல்லாம் முடித்துவிட்டு எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் சுமார் 8.00 மணிக்கு அங்கிருந்து கிளம்பி மருத்துவமனைக்கு சென்றோம்.

மருத்துவமனைக்கு எத்தனை பேர் சென்றோம் என்றால் என்னுடன் வந்த 4 பேர் போனார்கள். நான் மருத்துவமனைக்கு போகவில்லை. அடிப்பட்டவர் SI சீனிவாசன், அந்தோணிராஜா அடுக்கம்பாறையில் சேர்த்தாக தகவல் சொன்னார்கள். உத்தரவு பெற்று நாங்கள் ஆயுதப்படைக்கு போய்விட்டோம். இது தவிர்த்து என்னை எதுவும் விசாரிக்கவில்லை என்றால் DSP அவர்கள் அவர் அலுவலகத்தில் வைத்தே என்னை விசாரணை செய்தார். விசாரித்து கைப்பட எழுதி கொண்டார்கள். எத்தனை பக்கம் எழுதினார்கள் என்றால் 2 பக்கம் இருக்கலாம். அந்த வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை.

நான் என் உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் சாராய வேட்டையின்போது ஆடு மாடு மேய்த்து கொண்டிருந்தவர்களை பார்த்து சுட்டுவிட்டார் என்றாலும் அதில் மணி என்ற நடுபையனுக்கு காலில் காயம் ஏற்பட்டது என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க எங்கள் உயர் அதிகாரி DSP அவர்கள் கேட்டு கொண்டதன் பேரில் எதிரிகள் சாராயம் விற்று கொண்டிருந்ததாகவும் துப்பாக்கியால் சுட்டதாகவும் கல்லால், கத்தியால் தாக்கியதாகவும் அவர்கள் மீது பொய் வழக்கு போட்டு DSP க்காக நான் பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் பொருட்களான துப்பாக்கிகள், கத்தி, கல் அனைத்தும் DSP அவர்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் விசாரணையில் எந்த நபர் கல்லால் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பெயர் சரியாக நினைவில்லை. வழக்கு சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் 4 வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக எதிரியை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 01.30 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.02.12 18:04:07 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்